

நெல்லை மேற்கு மாவட்டம் கடையம் மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று பல்வேறு ஆலோசனை களை வழங்கி உரையாற்றினார். உடன் மாநில சுற்றுச் சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார், ஆதித்தன் கழக நிர்வாகிகள் மைக்கேல், கணேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, பெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட திருக்கோவிலூர் அணைக்கட்டினை ரூ.130 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு மற்றும் புனரமைக்கும் பணிக்கு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மு.தங்கம், டி.என்.முருகன், இரா.கற்பகம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தானர்.

### வாக்குகளுக்காக திட்டங்களை தீட்டாமல்

# எதிர்கால தலைமுறைக்காக உழைப்பவர் முதல்வர்!

## திருவண்ணாமலையில் நலஉதவிகள் வழங்கி, அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, அக்.15 -

வாக்குகளுக்காக திட்டங்களை தீட்டாமல், எதிர்கால தலைமுறைக்காக உழைப்பவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு, நல உதவிகள் வழங்கி பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது குறிப்பிட்டார்.

11.10.2025 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், நல்லவன்பாளையத்தில் திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன் தலைமை வகித்தார்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், ஒன்றிய செயலாளர்கள் த.ரமணன், பெ.கோவிந்தன், பொதுக்குழு உறுப்பினர் து.கென்னடி, மாநகர பகுதி செயலாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம். மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் சம்மந்தனூர் மணி, மாவட்டப் பிரதிநிதிகள் எம்.ஜி.சுப்பிரமணி, சி.பாபு, இல.சரவணன், ஒன்றிய பொருளாளர் பா.ஏழுமலை, ஒன்றிய துணை செயலாளர்கள்சுபாசெல்வமணி, யுவராஜ், நாக.சங்கர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.பாஷா, மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.தே.முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர பகுதி செயலாளர் லயன் பா.ஷெரீப் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, நல்லவன்பாளையம் தூய்மை பணியாளர்களுக்கு காப்பீட்டு திட்டச் சான்றுகள் மற்றும் பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ. வேலு சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

அருமை அண்ணன் கலைஞரின் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, அவர்மீது கொண்டிருக்கிற பாசத்தின் காரணமாகத்தான் இங்கே கழக முன்னோடிகளெல்லாம் வருகை தந்து சிறப்பித்திருக்கிறார்கள். இதற்கு காரணம் கலைஞர்மீது மக்கள் வைத்திருக்கிற பற்றும், பாசமும்தான். தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் தலைவர் கலைஞரைவிட நல்லது செய்த வர்கள் எவரும் கிடையாது. தமிழ்நாட்டில் எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டிருக்கிறார்கள்.

பிரகாசம், ஓமந்தூரார், காமராஜர், பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி என எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டிருந்தாலும் கூட, தமிழ்நாட்டினுடைய நலனுக்காக பாடுபட்ட ஒரே முதலமைச்சர் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது.



**போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வென்றவர் கலைஞர்!**

60 ஆண்டு காலம் திரையுலகில் கோலோட்சி இருக்கிறார். போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற ஒரே தலைவர் கலைஞர்தான். அவருக்கு நிகராக தலைவர்கள் யாருமில்லை. 5முறை தமிழகத்தை ஆண்ட ஒரே முதலமைச்சர் கலைஞர்தான். தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கியவர், தமிழ்நாட்டிலேயே 12,500க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள், 500க்கும் மேற்பட்ட ஊராட்சிகள், 150க்கும் மேற்பட்ட நகராட்சிகள், 21 மாநகராட்சிகள் இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை இருக்கிற இடைப்பட்ட நகரங்களிலும், ஊராட்சிகளிலும் இன்றைக்கு பாதுக்காக்கப்பட்ட குடிநீர் அருந்துகிறார்கள் என்று சொன்னால், அதற்கு காரணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை உருவாக்கித் தந்த கலைஞர்தான்.

மக்களுக்குத் தேவையான பொருளை குறைந்த விலையில் வாங்க வேண்டும், அதற்குத்தான் நியாய விலைக்கடையில் துவரம்பருப்பு குறைந்த விலையில் வாங்கலாம். 32,000க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் பொருள் வாங்குகிறோம் என்று சொன்னால், அந்த நியாய விலைக்கடை உருவாக்கித் தந்தவர் அண்ணன் கலைஞர். அதனால்தான் அவருக்கு நிகரான முதலமைச்சர் இல்லை, தமிழ்நாட்டிற்கு என்னென்னத் தேவையோ, அதை எல்லாம் அறிந்து செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தமிழ்நாட்டில் அந்த காலத்தில் நிறைய தாய்மார்கள், வங்கிக்குச் சென்றிருக்க மாட்டார்கள். ஆண்கள் மட்டுந்தான் செல்வார்கள். ஆனால் இன்று ஆண்களைவிட பெண்கள்தான் அதிகம் செல்கிறார்கள். இதற்கு காரணம் மகளிர் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கித் தந்த தலைவர் கலைஞரால்தான். முன்பெல்லாம் பணக்காரர்கள் வீட்டி ல் மட்டுந்தான் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் இருந்தன. ஆனால், அனைத்து வீட்டிற்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி, நாட்டு நடப்புகளையும், செய்திகளையும் அறிய வைத்தவர் தலைவர் கலைஞர்.

**விவசாயிகளுக்கு உந்து சக்தியாக விளங்கி யவர் முத்தமிழறிஞர்!**

திருவாரூருக்கு பக்கத்தில் திருக்குவளை என்ற கிராமத்தில் ஒரு விவசாயி வீட்டு பிள்ளையாக பிறந்தவர்தான் தலைவர் கலைஞர். அதனால்தான் அவர் ஆட்சிக்கு வருகிற போதெல்லாம் விவசாயி களுக்கு உந்து சக்தியாக இருந்து பல திட்டங்களை தந்தார்.

ஒரு காலத்திலே மாவட்ட ஆட்சியரை பார்ப்பதற்கு வேலூர் செல்ல வேண்டும். இதற்கு ஒரு நாள் ஒதுக்க வேண்டும். ஆனால், ஒரு மணிநேரத்தில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து, பிரச்சினையை தீர்த்திட திருவண்ணாமலையை தனி மாவட்டமாக்கியவர் அண்ணன் கலைஞர்.

திருவண்ணாமலை ஒரு ஆன்மீக நகரம். அப்போதைய பாரதிய ஜனதா அரசின் அமைச்சர் ஜக்மோகன் அவர்களால் அண்ணாமலையார் திருக்கோயில் தொல்லியல் துறை எடுத்துக் கொள்ளும் ஒரு அபாயம் வந்தது. தொல்லியியல் துறை எடுத்துக் கொண்டால் அன்றாட பூஜைகள், திருவிழாக்கள் நடைபெறாது, கோவில் ஒரு காட்சிப் பொருளாக மாறிவிடும். அப்போது நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சா ரத்திற்கு, திருவண்ணாமலைக்கு வருகை தந்த தலைவர் கலைஞரிடம், ஊர் பிரமுகர்கள் கோவிலை மீட்க கோரிக்கை வைத்தனர். அவர்களிடம், கலைஞர் அவர்கள் நான் நினைக்கிற ஆட்சி மத்தியிலே அமைந்தால், திருக்கோவிலை மீட்டுத் தருகிறேன் என்று உறுதி கூறினார். மன்மோகன் சிங் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டு, தொல்லியல் துறை கையகப்படுத்தும் என்ற நிலையை மாற்றிக்காட்டியவர் கலைஞர் அவர்கள். இந்த சாதனைகளை எல்லாம் செய்ததால்தான் அவருக்கு 102வயதிலும் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**கொரோனாவை தமிழகத்திலிருந்து விரட்டியவர் முதல்வர்!**

பெரியார், அண்ணா, கலைஞர் இவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதுதான் திராவிட மாடல் ஆட்சி, எல்லோருக்கும் எல்லாம் என்பது தான், திராவிட ஆட்சியின் நோக்கம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து செயல்பட்டு வருகிறார். கொரோனா காலத்தில் கொடிய நோய் பலரையும் காவு வாங்கியது. ஆக்சிஜன் இல்லை, மருந்து, மாத்திரைகள் இல்லை என்ற நிலையில் தான் முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார். அவருடைய நிர்வாகத் திறமையால் கொரோனா என்ற கொடிய வியாதியை தமிழகத்தைவிட்டுவிரட்டினார்.

அதன் தொடர்ச்சியாக தாய்மார்களுக்கு நகைக்கடன்களை தள்ளுபடி செய்தார். மகளிர் உரிமைத் தொகை ரூ.1கோடி, 16லட்சம் குடும்பங்களுக்கு வழங்கி வருகிறார். புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பெண்களின் கல்லூரிப் படிப்பிற்கு மாதம் ரூ.1000, ஆணாக இருந்தால் தமிழ்புதல்வன் திட்டத்தில் கல்லூரி படிப்பிற்கு மாதம் ரூ.1000, 80வயதானவர்களுக்கு வீட்டிற்கே நியாய விலைக்கடை பொருட்களை தாயுமானவர் திட்டத்தின் மூலம் வழங்குகிறார். அன்புக் கரங்கள் என்ற திட்டத்தின்கீழ் கொரோனா காலத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு கல்வி மற்றும் செலவுகளுக்காக மாதம் ரூ.2000 வழங்குகிறார். இவர்களுக்கென்ன வாக்கா இருக்கிறது. வாக்களிக்க, ஓட்டுக்காக இல்லாமல் எதிர்கால தலைமுறை வாழ தாயுள்ளத்தோடு திட்டம் தீட்டுபவர்தான் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**முதல்வரின் கரத்தை வலுப்பத்துவது தமிழரின் கடமை!**

ஆண்களை விட பெண்கள்தான் குடும்பப் பொறுப்பை உணர்ந்தவர்கள். அதை உணர்ந்த காரணத்தினால்தான், நமது முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாய்மார்களுக்காகவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், பல நல்ல திட்டங்களை தீட்டியிருக்கிறார். திருவண்ணாமலை நகராட்சி, மாநகராட்சி என்று மாற்றி அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். அவருடைய கரத்தை வலுப்படுத்த வேண்டியவது தமிழர்களின் கடமை. தொடரட்டும் திராவிட மாடல் ஆட்சி, ஓங்குக கலைஞரின் புகழ்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

பொது கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தர ராசன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, க.சுப்பிரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபானி,

துணை மேயர் சு.ராஜாங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குண சேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.பாபாஜான் நன்றி கூறினார். முன்னதாக ஆ.தே.முருகையன் குழுவினரின் நவீன நாடகம் நடைபெற்றது.

### கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு

# தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரங்கல் தீர்மானம்!

## மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்பு!

சென்னை, அக். 15 -

தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று காலை 9.30 மணியளவில் கூடியதும்,முதல் நிகழ்வாக,சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவர்களைப் பற்றிய இரங்கல் குறிப்புகள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களால் படிக்கப்பட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து கரூரில்,27.9.2025 அன்று நடைபெற்ற பரப்புரை ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் உயிர் நீத்த 41 பேருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

முன்னாள் உறுப்பினர்கள் ச.புரட்சிமணி, சு.குணசேகரன், வி.சே.கோவிந்தசாமி, ஓ.எஸ்.அமர்நாத், ஆ.அறிவழகன், துரை அன்பழகன் என்கிற இராமலிங்கம், ம.அ.கலிலூர் ரகுமான் மற்றும் இரா.சின்னசாமி ஆகியோர் பற்றிய இரங்கல் குறிப்புகளை பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்கள் வாசித்தார்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், முதுபெரும் அரசியல் தலைவர் மற்றும் நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் மறைந்த பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் தீர்மானங்களை வாசித்த பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், உறுப்பினர்களும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து, வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

பேரவையின் முதல் நாள் கூட்டத் தொடரில் இரங்கல் குறிப்புகளும் இரங்கல் தீர்மானங்களும் நிறைவேற்றிய பின்னர், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் கூட்டம் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இந்தக் கூட்டத் தொடர் அக்.15,16,17 ஆகிய நாட்கள் நடைபெறுகின்றன.

### செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

# கோணையில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 15 -

முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் ,தாயுமானவர், அன்புக்கரங்கள் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சரை உலகமே பாராட்டுகிறது கோணையில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பேச்சு. செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கோணை ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில்அனைத்து துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அப்போது நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை. எளிய மக்களின் மீது அக்கறை கொண்டுள்ளதால் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வருகிறார் அந்த வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அறிவித்து பொது மக்களாகிய நீங்கள் வீட்டு மனை பட்டா, ரேஷன் அட்டை, பட்டா மாற்றம்,மின் இணைப்பு மாற்றம் கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை ஒரே இடத்தில் வழங்குவதற்காகவும் 16 துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உங்களை நேரில் சந்தித்து பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமல் அவர்களுடைய குறைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக இதுபோன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் பல்வேறு விதிமுறைகளை தளர்த்தி கலைஞர் மகளிர் தொகை பெறுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில் விண்ணப்பம் செய்துள்ளதகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு 100% கலைஞர் மகளிர் உரிமைத்தொகையைமுதலமைச்சர் விரைவில் வழங்க உள்ளார் .

தாய் தந்தை இழந்த குழந்தைகளுக்கு அன்பு கரங்கள் திட்டம் மூலம் 6200 குழந்தைகளுக்கு மாதம் 2000 ரூபாய் வழங்கும் திட்டத்தையும், இன்னுயிர் காப்போம் 48 திட்டத்தின் மூலம் 6,82,000 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் இது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை உலகமே பாராட்டுகிறது என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய், சர்க்கரை, நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து மாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

முகாமில் கோனை, ஜெயங்கொண்டான், ஜம்போதி, மேல்எடையாளம் ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,மாவட்ட கவுண்சிலர் அரங்க ஏழுமலை,வருவாய் ஆய்வாளர் பிரபு சங்கர்,ஊராட்சி மன்ற தலைவர்கள்பிருந்தா சக்தி முருகன், அழகேசன், லட்சுமி சுப்பிரமணியன், செல்வி செல்வ மணி, அனையேரி ரவி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி, ஒன்றியநிர்வாகிகள் ஆறுமுகம்,அய்யாதுரை, இக்பால், வாசு,செல்வமணி, பிரசன்னா, கதிரவன்,ஆனந்த மூர்த்தி மோகன் தேவ ராஜ்,ஊராட்சி நிர்வாகிகள் காந்தி, பிரசாந்த் , வசந்த், தினகரன், ஜே. என். நாகராஜ், நாகமுத்து,பாலமுருகன் இளைஞர் அணி முரளி கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 113வது வட்டத்தைச் சேர்ந்த நுங்கை எஸ்.சுரேஷ் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்-14.10.2025

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சின்னபாபு சமுத்திரம் ஊராட்சியில் தீயணைப்பு நிலையத்தை திறந்து வைத்தார். உடன் செ.புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஆர்.எஸ்.வாசன், சீனு செல்வரங்கன், கு.செல்வமணி, வே.கணேசன், கப்பூர் ராஜா, பனிமொழி செல்வரங்கன், நஜிரா பேகம் தமீன், ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.